**ஊடக சந்திப்பு**
**உயர் ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் ஜா அவர்களது ஆரம்ப உரை**
**(08 ஜனவரி 2026)**

இங்கு வருகை தந்தமைக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி அனைவருக்கும் புது வருட நல்வாழ்த்துகளைக் கூறி இன்றைய இந்த ஊடக சந்திப்பினை ஆரம்பிக்கின்றேன்.

கடந்த வருட நிகழ்வுகளின் ஒரு சாராம்சத்தினை துரிதமாக வழங்குவதற்காகவும், நாம் புது வருடத்தை ஆரம்பிக்கின்ற நிலையில் இந்திய இலங்கை பங்குடைமை குறித்த பிரதிபலிப்புகள் பற்றிய கருத்துகளை பரிமாறவும், வழமைபோலவே இவ்வாறானதொரு சந்திப்பினை இன்று மேற்கொள்வதற்கு தீர்மானித்திருந்தோம்.

2025 ஆம் ஆண்டு தொடர்பான சாராம்சத்தினை கூறுவதாக இருந்தால், “ மீள் வலுவூட்டல் மற்றும் மீள உறுதிப்படுத்தலுக்கான ஆண்டு” என கூற முடியும்: இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு நிகழ்ச்சி நிரலை மீள் வலுவூட்டல் மற்றும் நமது நாகரீக நட்புறவின் பலத்தினை மீள உறுதிப்படுத்தல். நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் நட்புறவு ஆகியவை எல்லா நேரங்களிலும் மிகவும் உயர்வான நிலையில் உள்ளன.

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2025 ஏப்ரலில் மேற்கொண்ட இலங்கை விஜயத்துடன் வருடம் ஆரம்பமாகியது. 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இலங்கை ஜனாதிபதி அவர்களால் முதன்முதலாக வரவேற்கப்பட்ட வெளிநாட்டு அரச தலைவர் அல்லது அரசாங்கம் ஒன்றின் தலைவர் பிரதமர் மோடி ஆவார். முன்னதாக, 2024 டிசம்பரில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் தான் பதவியேற்றதன் பின்னர் முதல் வெளிநாட்டு விஜயத்துக்காக இந்தியாவை தெரிவு செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் மூலமான, புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மற்றும் புதிய திட்டங்கள் அடிப்படையில் கணிசமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. இதில் முக்கிய அம்சமாக, இந்த விஜயத்தின் போது பிரதமர் அவர்களுக்கு “ இலங்கை மித்ர விபூஷண்” விருது வழங்கப்பட்டமையை குறிப்பிட முடியும். வெளிநாட்டு தலைவர்களுக்காக இலங்கை வழங்கும் மிகவும் உயரிய கௌரவம் இதுவாகும். இந்த கௌரவத்தினை சிறப்பித்து ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டிருந்த பிரதமர் அவர்கள் இந்திய இலங்கை உறவின் உள்ளுணர்வை பிரதிபலித்து இரு நாடுகளையும் நாகரீக இரட்டையர்கள் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆண்டில் ஒரு தொடர்ச்சியான உயர் மட்ட பரிமாற்றங்கள் மற்றும் விஜயங்கள் இடம்பெற்றிருந்தன. பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள் 2025 அக்டோபரில் மேற்கொண்டிருந்த இந்திய விஜயம், குறிப்பிட்ட விடயங்கள் சார்ந்த பரிமாற்றங்களுக்காக பல்வேறு அமைச்சர்களது விஜயம், இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கம் தலைமையிலான பேராளர்களின் விஜயம் உட்பட பாராளுமன்ற பேராளர்களது விஜயம் போன்றவை இதில் உள்ளடங்குகின்றன

இந்த உத்வேகமானது இவ்வாறான உயர் மட்ட ஈடுபாடுகளில் மாத்திரம் தென்படவில்லை, மாறாக நமது தலைமைத்துவங்களால் இணங்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களிலும் அதனை தெளிவாக காண முடிந்தது. விவசாயம் மற்றும் சுகாதாரத் துறைகள் சார்ந்த கூட்டுப் பணிக் குழுக்களின் அங்குரார்ப்பண கூட்டங்கள் 2025 இல் இடம்பெற்றிருந்தன. புதுப்பிக்கத்தக்க சக்தி குறித்த கூட்டுப் பணிக்குழு கடந்த வருடம் இரண்டாவது தடவையாக கூடியிருந்தது. அதுமட்டுமல்லாமல் தேர்தல் உத்தியோகத்தர்கள், நீதித்துறை சார்ந்த அதிகாரிகள், கணக்காய்வாளர்கள், கைவினைஞர்கள் முதல் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பல்வேறு துறைகளிலும் இலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நிபுணர்கள் பல்வேறு திறன் மேம்பாட்டு செயற்திட்டங்களுக்காக இந்தியாவுக்கான விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். இவற்றின் மூலமாக ஆளுமை விருத்தி ஒத்துழைப்பை விரிவுபடுத்தினோம்.

இந்திய இலங்கை விஜயங்கள் குறித்த நிகழ்ச்சி நிரலை நோக்கும்போது டிசம்பர் 22 - 23 ஆகிய திகதிகளில் வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்ஷங்கர் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்துடன் வருடம் நிறைவடைந்திருந்தது. பிரதமர் நரேந்திர மோடி அவர்களது விசேட தூதுவராக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கான ஒரு செய்தியுடன் அவர் வருகை தந்திருந்தார், டித்வா புயலினால் ஏற்பட்ட பேரழிவினை அடுத்து வழங்கப்படும் ஆதரவு மற்றும் கூட்டொருமைப்பாட்டின் செய்தியே அதுவாகும். இலங்கையின் மிகுந்த நம்பிக்கைக்குரிய நண்பனாகவும் மிகவும் நம்பகமான பங்காளராகவும் இந்தியா தொடர்ந்து உள்ளது என்பதனையே இது சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையின் மிகவும் கிட்டிய அயல்நாடாக இந்தியா எப்பொழுதும் முதற்கண் உதவி வழங்கிய நாடாக இருந்து வருகின்றது. டித்வா புயல் ஆரம்பித்த நிலையில் நாங்கள் எமது மீட்பு மற்றும் நிவாரண பணிகளை சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் அதே நாளில் ஆரம்பித்திருந்தோம்.

இந்திய கடற்படையின் விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் இந்திய கடற்படை கப்பலான ஐஎன்எஸ் உதயகிரி ஆகிய கப்பல்கள் சர்வதேச கடற்படை அணி வகுப்புக்காக கொழும்பில் தரித்து நின்ற நிலையில் உடனடியாகவே மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன இந்த கப்பல் மூலமாக உடனடி மீட்பு மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றில் உலர் உணவு மற்றும் உடனடி உணவுப் பொருட்களும், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் மீட்பு தொகுதிகளும் உள்ளடங்கும் அது மட்டுமல்லாமல் மீட்பு பணிகளுக்கு ஆதரவளிப்பதற்காக ஐ.என்.எஸ் விக்ராந்த் கப்பலிலிருந்து இரண்டு சேதக் உலங்குவானூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

அதற்குப் பின்னர் இந்திய விமானப்படைக்கு சொந்தமான மூன்று Mi-17 உலங்குவானூர்திகள் இலங்கையில் இரண்டு வார கால பகுதிக்கும் அதிகமான காலம் தொடர்ந்து சேவைகளில் ஈடுபட்டு, பயணிக்க முடியாத நிலையில் சிக்கி இருந்தவர்களை மீட்டதுடன் அவற்றின் மூலமாக உதவிப்பொருட்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. 80 உறுப்பினர்களை கொண்ட தேசிய பேரிடர் மீட்பு படையினர் வருகை தந்ததுடன் சமநேரத்தில் அவர்களால் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதேபோல கண்டிக்கு அருகில் 85 மருத்துவ

பணியாளர்களுடன் இந்திய ராணுவத்தினரால் கள மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு கிட்டத்தட்ட 8,000 பேருக்கு அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் இரண்டு BHISHM அவசர மருத்துவ தொகுதிகள் வான் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இப்பேரழிவின் விஸ்தீரணம் மற்றும் தன்மை காரணமாக முக்கிய உட்கட்டமைப்பு இணைப்புகளை மீளமைப்பதற்கான அவசர தேவைகள் ஏற்பட்டிருந்தன. 2025 டிசம்பர் முதலாம் திகதி அதிமேதகு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இடையிலான தொலைபேசி உரையாடலிலும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைவாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெய்லி பாலங்கள் வான் மார்க்கமாக கொண்டுவரப்பட்டிருந்தன. இந்நிலையில் புயல்காரணமாக கிளிநொச்சியில் A35 வீதியிலிருந்த பாலம் அழிவடைந்திருந்த நிலையில் இந்திய இராணுவ பொறியியல் பிரிவினரால் முதலாவது பாலம் அங்கு அமைக்கப்பட்டதுடன் வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்ஷங்கர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. கண்டி – ராகலை வீதியில் அமைக்கப்பட்டு வரும் இரண்டு பாலங்கள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. இப்பாலங்கள் 45 பேரடங்கிய இந்திய ராணுவ பொறியியலாளர்களால் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்திய இராணுவத்தின் சமிக்கை நிபுணர்கள் ( கள மருத்துவமனை அணியின் ஒரு பகுதியினர்) மகியங்கனை பிராந்தியத்தில் துண்டாடப்பட்டிருந்த OFC கேபிள் இணைப்புகளை மீளமைத்து தொலைத்தொடர்பு வசதிகளை சீரமைத்திருந்தனர்.

நவம்பர் 28ஆம் திகதி முதல் டிசம்பர் 22ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்பட்ட சாகர் பந்து நடவடிக்கையின்போது ஒட்டுமொத்தமாக 1100 தொன்களுக்கும் அதிகமான நிவாரண பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன, இந்நிவாரண பொருட்களில் உலர் உணவுகள், கூடாரங்கள், நிலவிரிப்புகள், சுகாதாரத் தொகுதிகள், அத்தியாவசிய உடைகள் மற்றும் குடிநீர் தூய்மையாக்கல் தொகுதிகள், 14.5 தொன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், 60 தொன் உபகரணங்கள் மற்றும் 228 தொன் பெய்லி பால தொகுதிகள் உள்ளிட்டவை அடங்குகின்றன. இதற்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள இந்திய நிறுவனங்கள் இலங்கையை மீளக்கட்டி எழுப்பும் நிதியத்துக்காக ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பங்களிப்பினை வழங்கியுள்ளனர். இலங்கையின் மீட்சி மற்றும் நீண்ட கால அபிவிருத்திக்கான அவர்களது பங்களிப்பினை சுட்டிக்காட்டுவதாக இது அமைகின்றது.

2025 டிசம்பர் பிற்பகுதியில் வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களது விஜயத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் தொகுப்புகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாண திட்டங்கள் தொடர்பாக நாம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றோம்.

இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் மகாசாகர் கொள்கைகளில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் முக்கிய இடத்தினை நிரூபிப்பதாக இது அமைகின்றது. 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி பொதியினை வழங்குவதற்கு இந்தியா முன்வந்திருந்தமை இக்கொள்கையின் பிரதிபலிப்பே ஆகும். இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுகளாலும் கணிக்கப்பட்ட தேவைகளுக்கு இந்த உதவி ஆதரவாக அமைகின்றது.

இந்த முன்மொழியப்பட்ட உதவி பொதியானது, 350 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகை கடனையும், 100 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையையும் உள்ளடக்கியதாகும். மிக மோசமாக பாதிக்கப்பட்ட துறைகளில் இலங்கைக்கு ஆதரவினை வழங்குவதற்கான பன்முக நோக்குடன் இந்த உதவி திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலமாக உதவிகள் வழங்கப்படும் ஐந்து பரந்த வகைகள்:

(i) வீதிகள் ரயில்வே மற்றும் பாலங்கள் ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணம்;
(ii) முழுமையாக சேதமடைந்த மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் நிர்மாணத்திற்கான ஆதரவு
(iii) குறிப்பாக புயலினால் சேதமடைந்த சுகாதார மற்றும் கல்வி அமைப்புகளுக்கான ஆதரவு
(iv) குறுகிய மற்றும் நடுத்தர காலப்பகுதியில் ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல் உட்பட விவசாயத்துறை, மற்றும்
(v) சிறந்த பேரிடர் மீட்பு மற்றும் தயார் நிலையை நோக்கிய பணிகள்

வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது இலங்கை தலைமைத்துவத்துடன் இடம்பெற்றிருந்த பேச்சுகள் இந்த உதவியினை பல்வேறு துறைகளிலும் எவ்வாறு துரிதமாக செயல்படுத்த முடியும் என கலந்துரையாடப்பட்டிருந்தது. இதற்காக பல்வேறு அமைச்சுகளையும் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டு கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு முறைமை ஒன்று இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது கூட்டம் 2025 டிசம்பர் இறுதி வாரம் நடைபெற்றிருந்ததுடன் நானும் கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் பிரதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த அவர்களும் இணைத்தலைமை வகித்திருந்தோம்.

இந்த உதவி பொதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பாலங்களை எதிர்வரும் வாரம் திறந்து வைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அத்துடன் வடக்கு புகையிரத மார்க்கத்தினை மீளமைக்கும் பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். பாலத்தினை நிர்மாணிக்கும் பணிகள் 30 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை உதவி அடிப்படையில் முன்னெடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது எமது உத்தேச மதிப்பீடுகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட சகல பாலங்களையும் புனரமைப்பதற்கு இது போதுமானதாகும். அதே போல வடக்கு ரயில் பாதை புனரமைப்பு பணிகளும் நன்கொடை உதவியின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை அடுத்து வரும் இரண்டு வார காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவிருக்கும் நிகழ்ச்சி நிரலில் அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 200 RO நீர் சுத்திகரிப்பு தொகுதிகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. டித்வா புயலினால் தமது வீடுகளை இழந்தவர்களுக்கு தற்காலிக புகலிடங்களுக்கான உபகரணங்களை வழங்குவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் முழுமையாக சேதமடைந்த அல்லது பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை மீளமைப்பதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் ஆதரவை நன்கொடை உதவியாக வழங்குவது குறித்த முன்மொழிவுகள் தொடர்பாக விரைவில் இறுதி முடிவுகள் எட்டப்படும். இந்திய ரூபா அடிப்படையிலான கடனுதவிகளை வழங்குதல் உட்பட பல்வேறு செயற்திட்டங்களுக்கான வழிமுறைகளை தீர்மானிக்கும் பணிகளும் எங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. சேதமடைந்த வீதிகள், சேதமடைந்த ரயில் பாதைகள் புனரமைப்பு, உணவு, மருந்து, உரங்கள், கால்நடைகள் மற்றும் பற்றாக்குறைகளை எதிர் கொள்ளும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஆதரவு போன்றவை கடனுதவி திட்டத்தின் கீழ் உள்ளடங்கும். பேரிடருக்குப் பின்னரான மீட்பு நடவடிக்கைகளின்போது நேரம் மிக முக்கியமானதாகும். எமது திட்டங்கள் மிகவும் கவனமாக வகுக்கப்பட்டுள்ளன, அத்துடன் முன்னேற்றம் மற்றும் மதிப்பாய்வுக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நாம் உங்களுடன் தொடர்ந்து புதிய தரவுகளை பகிர்ந்துகொள்வோம், அத்துடன் இத்திட்டங்களை விரைவாக நிறைவேற்ற நீங்கள் இருதரப்பினரையும் உந்துவீர்களென நம்புகின்றோம்.

நண்பர்களே, இந்த உதவி பொதி மற்றும் துரிதமாக அமல்படுத்துவதற்கான எமது அக்கறை ஆகியவை இந்திய இலங்கை பங்குடைமையில் மக்களை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளின் வெளிப்பாடாகும். இதுவரை எம்மால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த பொருளாதார உதவியான ஏழு பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக இந்த உதவிப் பொதி அமைகின்றது. 780 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியிலான திட்டங்களுடன் இலங்கையின் பிரதான அபிவிருத்தி பங்காளராக இந்தியா தொடர்கின்றது. இவ்வாறான திட்டங்களில் பெரும்பாலானவை நன்கொடை உதவி திட்டங்களின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நன்கொடை திட்டங்களில் இந்திய வீடமைப்பு திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ் பெருந்தோட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் 10000 வீடுகளை அமைப்பதற்கான திட்டம் உள்ளடங்குகின்றது. இதேவேளை இத்திட்டத்தில் 3300 வீடுகள் நிர்மாணத்தின் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. மிகுதி 6700 வீடுகளை புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அல்லது எதிர்காலத்தில் அனர்த்தங்களை சந்திக்கும் அபாயத்தினை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதேபோல, இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தின் மேம்பாட்டுக்காக கிட்டத்தட்ட பத்து மில்லியன் அமெரிக்க டொலர் உதவிப் பொதி ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 8 மில்லியன் அமெரிக்க டொலர் இன்னமும் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதால், பேரிடருக்கு பின்னரான மீட்பு பணிகளுக்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு பயன்படுத்த முடியும். குறிப்பாக டித்வா புயலினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தினரை இலக்காகக் கொண்டு அதனை பயன்படுத்தலாம்.

இவ்வாறு அக்கறை கொள்ளப்படும் ஆதரவுக்கு மேலாக, வர்த்தக மற்றும் முதலீட்டு துறைகளில் எமது பொருளாதார தொடர்புகளை மேலும் வலுவாக்குவதற்காக இந்தியா இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்றும். பேரிடர் சவால்களுக்கு மத்தியில் NASSCOM தூதுக்குழு 2025 டிசம்பர் 4-6 திகதி வரையில் இலங்கைக்கான கூட்டொருமைப்பாட்டைக் காண்பிக்கும் விஜயமென்றை மேற்கொண்டிருந்தனர். இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் 20க்கும் அதிகமான பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்ட பேராளர்களின் இந்த விஜயமானது இலங்கையின் வர்த்தக கட்டமைப்பில் நம்பிக்கையளிக்கும் ஒரு விஜயமாக மட்டுமல்லாமல், அதிகளவான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் டிசம்பர் மற்றும் ஜனவரி காலப்பகுதியில் உங்களது அழகான நாட்டுக்கு இந்திய சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருவதனை மேம்படுத்துவதாகவும் அது அமைந்தது.

நமது பொருளாதார பங்குடைமையில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்ற வருடமாக 2025 காணப்படுகின்றது. சம்பூர் சூரியக்கல் மின் சக்தி திட்டத்தின் அடிக்கல் நாட்டல், மாஹோ முதல் அனுராதபுரம் வரையிலான ரயில் பாதைக்கான சமிக்கை தொகுதி பொருத்தல் பணிகள் அங்குரார்ப்பணம் உட்பட பல்வேறு முக்கிய திட்டங்கள் இக்காலப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதேபோல முக்கிய அபிவிருத்தி திட்டங்களான மாகோ முதல் ஓமந்தை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு, 5000 மத ஸ்தலங்களுக்கான சூரிய மின்சக்தி தொகுதிகள் வழங்கல் ஆகியவை நிறைவடைந்துள்ளன. மின்சக்தி வலையமைப்பு இணைப்பு திட்டத்திலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்தின் மூலமாக இலங்கை இந்தியாவுக்கு தேவையான மின்சக்தியினை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் இருதரப்பு ஈடுபாடுகள் புதிய களங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையைச் சேர்ந்த ஆரம்ப நிலை நிறுவனங்கள் இந்தியாவில் ஆளுமை விருத்தி திட்டங்களில் ஈடுபடும் அதேவேளை இலங்கையின் கண்டுபிடிப்பு துறை சார்ந்த கட்டமைப்புகளுக்கு இந்தியாவின் முன்னணி மூலதன நிறுவனங்கள் ஆதரவை வழங்கி வருகின்றன.

வெளிப்படையானதும் வினைத்திறன் மிக்கதுமான பொது தனியார் பங்குடமை முறைகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நாங்கள் ஆதரவினை வழங்கி வருகின்றோம். 2018ல் காணப்பட்ட பதிவுகளை முறியடித்து 2025-ல் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்திருக்கும் நிலையில், இதில் 20 வீதத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். இந்த அடிப்படையில் சுற்றுலாத்துறை சார்ந்த தொடர்புகள் மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன. முதலீட்டுச் சபையின் புள்ளிவிபரங்களை நாம் நோக்கினால், 2025 இல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டில் அண்ணளவாக 25 வீதம் இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த தரவுகளை நாம் ஆழமாக நோக்கினால் உலகளாவிய ரீதியில் காணப்படும் பெருமளவான இந்திய நிறுவனங்கள் பெரும்பாலும் தமது உலகளாவிய துணை நிறுவனங்கள் மூலமாக தமது முதலீட்டை மேற்கொண்டுள்ளமையை எம்மால் காணமுடியும். உத்தியோக பூர்வ தரவுகளின் அடிப்படையில் நோக்குமிடத்து அவ்வாறான முதலீடுகள் பெரும்பாலும் மூன்றாவது நாடொன்றிலிருது மேற்கொள்ளப்பட்டதாகவே காண்பிக்கப்படுகின்றது. இதனை

கவனத்தில்கொள்ளும்போது, அண்ணளவாக 40 முதல் 50 வீதமான வெளிநாட்டு நேரடி முதலீடு இந்திய நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்டமையை புரிந்துகொள்ளமுடியும். இந்திய முதலீடுகள் பொருளாதாரத்தில் கணிசமான பங்கைக் கொண்டுள்ளன. மேற்கு கொள்கலன் முனையம் போன்ற திட்டங்கள் - உரிய நேரத்தில் நிறைவேற்றப்பட்டு, கொழும்பு துறைமுகத்தில் அதிநவீன தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது அத்துடன் CEAT இன் 171 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு போன்றவற்றை குறிப்பிடலாம். Mazagon Dock Shipbuilders நிறுவனத்தின் புதிய முதலீட்டின் ஆதரவுடன், கொழும்பு டொக்யாட் நிறுவனம் சவால்களை எதிர்கொண்ட நிலையிலிருந்து மீட்சியை நோக்கி நகரும் அத்தியாயங்களும் உள்ளன. Mazagon Dock Shipbuilders ஏற்கனவே உலகளாவிய பாரிய ஒப்பந்தங்களைப் பெற உதவியுள்ளது.

நாங்கள் நமது பொருளாதார தொடர்புகளை ஆழமாக்கி வர்த்தக செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நிலையில், வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் முதலீடு உள்ளிட்ட துறைகளில் இலங்கையின் முன்னணி பங்காளராக இந்தியா தொடர்ந்தும் இருக்கும் என நான் நம்புகின்றேன்.

இந்தியா இலங்கை பங்குடைமையானது தற்போது முன்னொருபோதுமில்லாத வகையில் வரலாற்று சிறப்புமிக்க முதன்மை நிலையில் உள்ளது என்பதனை கூறி இந்த உரையை நான் நிறைவு செய்கின்றேன். மிக நெருக்கமான ஈடுபாடுகள் மற்றும் எங்களது இரு நாட்டு மக்களின் நன்மைகள் குறித்த தெளிவான கவனத்துடன், ஈடிணையற்ற இந்த பிணைப்பினை எதிர்வரும் ஆண்டில் மேலும் வலுவாக்குவது எங்களின் பெருமுயற்சியாகும்.

உங்கள் பிரசன்னத்திற்கு நன்றி. உங்களிடம் கேள்விகள் இருப்பின் அதற்கு பதில் அளிக்க நான் முயற்சிக்கின்றேன் .

************